அதேபோன்று தமிழக அரசால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வட்டியிலா சிறுகடன்கள் வழங்கப்படுகிறது.

**குறை தீர்க்கும் குழு**

- வியாபாரிகளின் பிரச்சினைகள், புகார்கள் விசாரித்து தீர்வு வழங்கும்.
- சாலையோர வியாபாரிகள் தங்களது பிரச்சினைகள் குறைகளைத் தீர்க்க தாங்கள் வியாபாரம் செய்து வரும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சிகளில் ஆணையர், பேரூராட்சியில் செயல் அலுவலர் ஆகியோரை அணுகலாம்.
- மாநகராட்சிகளில் வார்டுகள் அளவில், வட்டார துணை கமிஷனர், காவல் துறை, நீதிமன்றத்தில் புகாரளிக்கலாம். இந்த அலுவலர்கள் தலைமையிலான குறை தீர்க்கும் குழு அந்த புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்.
- மேலும், சாலையோர வியாபாரிகள் சங்கம் அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மூலமாகவும் குறைகளை தெரிவிக்கலாம். சாலையோர வியாபாரிகள் தங்கள் உரிமைகளை பாதுகாக்கவும், குறைகளைத் தெரிவிக்கவும் பிரத்தியேகமாக சாலையோர வியாபாரிகள் சங்கங்களை அணுகலாம்.



- நகர வியாபாரக்குழு குறை தீர்க்கும் குழுக்களில் உறுப்பினராக உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களை அணுகியும் குறைகளை தெரிவிக்கலாம்.

---

**மேலும் விரிவான தகவல்களை அறிந்துகொள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**



அவசர உதவி எண்கள்

**அரசு உதவி எண்: 181**

**சிறகுகள் உதவி எண்:**

______________________

**நினைவில் கொள்ளுங்கள்!**

**சாலையோர வியாபாரம் ஒரு குற்றமல்ல,**
**அது ஒரு உரிமை.**
**சட்டப்படி நீங்கள் பாதுகாக்காப்பும்,**
**மரியாதையுடன் நடத்தவும்**
**உரிமை உள்ளவர்கள்.**



**சிறகுகள்**

## தனித்து வாழும் பெண்கள் செயல்பாட்டுக் கூட்டமைப்பு (SWAN)

# சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 2014



**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in

**அறிமுகம்**

நகர்புற சாலையோர சிறுகடை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், அவர்களின் வியாபாரத்தை ஒழுங்குபடுத்தவும், சட்ட அளவிலான பாதுகாப்பு மற்றும் உரிமையளிக்க இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

**முக்கிய உரிமைகள்**

- முன்னுரிமை: பெண்கள், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை உண்டு.
- வாழ்வாதார உரிமை: எந்த ஒருவரும் சட்டவிரோதமாக அவர்களை அப்புறப்படுத்த முடியாது.
- அடையாள அட்டை (ID Card): உள்ளூர் அமைப்பு வழங்கும் அடையாள அட்டை & விற்பனை சான்றிதழ் பெறும் உரிமை உண்டு.
- நியாயமான இடம்: தெரு வியாபாரிக்கான குறிப்பிட்ட இடங்களில் (Vending Zones) வியாபாரம் செய்யும் உரிமை உண்டு.
- தெளிவான விதிகள்: அபராதம், வியாபார இடத்திலிருந்து அகற்றுதல் போன்றவை சட்டப்படி மட்டுமே செய்யப்பட வேண்டும்.
- சமூக பாதுகாப்பு, கடனுதவி உள்ளிட்ட அரசின் நலத்திட்டங்களை அனுபவித்தல்.
- குறை தீர்க்கும் குழுக்கள் மூலம் வியாபாரிகளின் பிரச்சினைகளுக்குதீர்வுகாணும்உரிமைஉண்டு.
- வியாபாரிகளை கண்ணியமான முறையில் நடத்துதல், பாதுகாப்பான, நல்ல ஆரோக்கியமான சூழலில் வியாபாரம் செய்யும் உரிமை உண்டு.
- வியாபாரம் செய்யும் இடத்துக்கான உரிமம் பெரும் உரிமை.
- சமூக விரோதிகளிடம் இருந்து பாதுகாப்பு பெரும் உரிமை.

- தற்போது நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டத்திலும் என்ன இருந்தாலும், தனது விற்பனைச் சான்றிதழின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி சாலையோர விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த ஒரு வியாபாரியும், அத்தகைய உரிமைகளைப் பயன்படுத்துவதை எந்த ஒரு நபரோ அல்லது காவல்துறையோ அல்லது தற்போது நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டத்தின் கீழும் அதிகாரங்களைப் பயன்படுத்தும் வேறு எந்த ஒரு அலுவலரோ தடுக்கக்கூடாது.

**விற்பனை (வியாபார) மண்டலம்**

- அனைத்து சாலையோர வியாபாரிகளும் ஒரு நியமிக்கப்பட்ட விற்பனை மண்டலத்தில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அனைத்து விற்பனையாளர்களையும் ஒரே விற்பனை மண்டலத்தில் தங்க வைக்க முடியாவிட்டால், குலுக்கல் மூலம் இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.



இருப்பினும், ஒரே விற்பனை மண்டலத்தில் இடம் கிடைக்காதவர்கள் அருகிலுள்ள விற்பனை மண்டலங்களில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். ஒரு குறிப்பிட்ட பகுதி விற்பனை தடைசெய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்கப்பட்டால், இடமாற்றம் செய்ய குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்து விற்பனையாளர்கள் வேறு பகுதிக்கு மாற்றப்படுவார்கள்.

- சாலையோர வியாபாரி இறந்துபோனால், விற்பனைச் சான்றிதழ் இறந்த விற்பனையாளரின் வாழ்க்கைத் துணை அல்லது சார்ந்திருக்கும் பதினான்கு வயதிற்கு மேற்பட்ட நபருக்கு மாற்றப்படும்.

**கணக்கெடுப்பு**

- நகர விற்பனைக் குழு தனது அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து விற்பனையாளர்களிடமும் கணக்கெடுப்பு நடத்துவதற்குப் பொறுப்பாகும், மேலும் அத்தகைய கணக்கெடுப்பு ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் நடத்தப்பட வேண்டும். அத்தகைய கணக்கெடுப்பு செய்யப்பட்டு விற்பனைச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை கட்டணமின்றி வழங்கப்படும். இது தொழில் உரிமமாகக் கருதப்படும்.

**வங்கிக்கடனுதவிகள்**

- பிரதமரின் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் தொகை நேரடியாக பயனாளிகளின் கணக்குகளில் செலுத்தப்படுகிறது. 2025 ஜனவரி மாத நிலவரப்படி, பிரதமரின் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை ₹68.02 லட்சம். இவர்களில் தமிழகத்தில் ₹3.99 லட்சம் பயனாளிகள் உள்ளனர்.